காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் வெளியிட்டவுடன்

# புதிய வாக்காளர்களை சேர்க்கும் பணியில் கழகத்தினர் மும்முரமாக ஈடுபடுவீர்!

## மாவட்ட செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், செப்.30-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில், அக்டோபர் 27-ஆம் தேதி வாக்காளர் பட்டியல் வெளியிட்ட உடன், தமிழ்நாடு முதல் அமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் அறிவுறுத்தலின்படி, புதிய வாக்காளர்களை சேர்க்கும் முக்கிய பணியில் வார்டு கிளைக் கழக செயலாளர்கள் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் தேர்தல் பணிக் குழு உறுப்பினர்கள் மற்றும் கழகத்தினருடன் இணைந்து, அவரவர் பாகங்களில் புதிய வாக்காளர்களை சேர்க்கும் இன்றியமையா பணியில் முனைப்புடன் ஈடுபட வேண்டும் என்று மாவட்டக் கழக செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்

இந்திய தேர்தல் ஆணையம் 1.1.2024ஆம் தேதியை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்தில் உள்ள வாக்காளர் பட்டியலை திருத்தம் செய்ய உத்தரவிட்டுள்ளது.

வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்வதற்காக வரைவு வாக்காளர் பட்டியல் வருகிற அக்டோபர் 27 ஆம் தேதி வெளியிடப்பட உள்ளது. வரைவு வாக்காளர் பட்டியில் வெளியிட்ட அன்றைய தினமே வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்யும் பணிகளும் தொடங்கும்.

அக்டோபர் 27ஆம் தேதி முதல் டிசம்பர் 12ஆம் தேதி வரை வாக்காளர் பட்டியலில் புதிய வாக்காளர்கள் இடம் மாறிய வாக்காளர்கள் பெயர்களை சேர்த்தல், இறந்த இடம் மாறிய வாக்காளர்கள் பெயரை நீக்கம் செய்தல், பெயர் முகவரி மாற்றம் செய்யும் பணிகள் போன்ற திருத்தம் செய்யும் பணிகளை படிவம் 6, 6பி, 7, 8 ஆகிய படிவத்தில் பூர்த்தி செய்து, அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் தந்திட வேண்டும்.

முதல் அமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் அறிவுறுத்தலின்படி, வருகின்ற 2024ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி அன்று, 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாதவர்களின் பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்துள்ள வாக்காளர்களின் பெயர்களையும், தொகுதியிலிருந்து இடம் மாறியவர்கள் மற்றும் இறந்தவர்களின் பெயர்களை தற்போதுள்ள வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கவும் தீவிர நடவடிக்கைகளை மும்முரமாக மேற்கொள்ள வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.



மேலும், தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்வதற்கான சிறப்பு முகாம் நவம்பர் 4, 5, சனி, ஞாயிறு மற்றும் நவம்பர் 18, 19, சனி, ஞாயிறு ஆகிய 4 நாட்கள் காலை 9 மணி முதல் மாலை 5.00 மணி வரை மாவட்டம் முழுவதும், அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் நடைபெற உள்ளது.

மாவட்டம் முழுவதும், சாதாரண நாட்களில் வாக்காளர்களை சேர்க்கும் பணியிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறும் 4 நாட்களில் வாக்காளர்களை சேர்க்கும் பணியிலும், அந்தந்த வாக்குச்சாவடிகளில் உள்ள வார்டு கிளை கழக செயலாளர்கள், வாக்குச்சவாடி நிலை முகவர்கள் (BLA2), வாக்குச்சாவடி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் அனைவரும் இணைந்து இரு கரம் கோர்த்து இந்த இன்றியமையாத பணியினை இனிதே சிறப்பாக செய்து முடித்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நாடாளுன்ற தேர்தலுக்கு வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்யும் பணி மிகவும் முக்கியமானது என்பதை கவனத்தில் கொண்டு கழகத்தினர் அனைவரும் இணைந்து இப்பணியை முனைப்புடன் செய்திட வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்யும் இச்சிறப்பு பணியில் மாநகரபகுதிஒன்றியநகரபேரூர் கழக செயலாளர்கள் ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் நேரில் சென்று, கழகத்தினர், வாக்குச்சாவடி நிலை முகவர்கள், தேர்தல் பணிக்கு உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகளுடன் இணைந்து இப்பணியை சிறப்பாக செய்கிறார்களா என்பதை கண்காணிப்பு செய்யும் பணியில் ஈடுபட வேண்டும் என்று மேலும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிக்கையில் கூறியுள்ளார்.

# தமிழ்நாட்டில் ஒரு கோடி பனை விதைகள் விதைக்க அரசு ஏற்பாடு!

## பணிகள் வரும் 1-ஆம் தேதி தொடக்கம்!

சென்னை, செப். 30 -

பனை மரத்தொழிலாளர்கள் நல வாரியம், கிரீன் நீடா சுற்றுச் சூழல் அமைப்பு மற்றும் நாட்டு நலப்பணி திட்டம் ஆகிய அமைப்புகளோடு தன்னார்வலர்களும் இணைந்து தமிழ்நாடு அரசு வழிகாட்டுதலுடன் பனை விதைகளை விதைக்கும் பணி நடைபெற உள்ளது.

திருவள்ளூர் முதல் கன்னியாகுமரி கடற்கரை வரையிலான ஆயிரத்து 76 கிலோ மீட்டர் தொலைவு நெடுகிலும் ஒரு கோடி பனை விதைகள் சேகரித்தல் மற்றும் சேகரித்த பனை விதைகளை அக்டோபர் 1ல் நடவு செய்தல் போன்ற பணிகள் தொடங்கப்படவுள்ளன. இதில் அனைத்து கல்லூரி மாணவர்களும் பங்கு பெறும் வகையில், ஒவ்வொரு கல்லூரியிலிருந்தும் 10 மாணவர்களுக்கு 1 ஆசிரியர் வீதம் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர் பாக அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகள் மற்றும் சுயநிதி கல்லூரிகளின் முதல்வர் களுக்கு சுற்றறிக்கை அனுப்பவும் அறிவுறுத்தபட்டுள்ளது.



தமிழ்நாடு சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் இயங்கும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட பணிகள் சார்பில் கொளத்தூர், திரு.வி.க. நகர், எழும்பூர், பெரம்பூர், துறைமுகம் ஆகிய 5 தொகுதிகளில் வசிக்கும் 370 கர்ப்பிணிப் பெண்களுக்கு கொளத்தூரில் உள்ள காமராஜர் திருமண மண்டபத்தில் சமுதாய வளைகாப்பு விழா நடைபெற்றது. இதில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பங்கேற்று நடத்தி வைத்து, கர்ப்பிணிப் பெண்களுக்கு சீர்வரிசை பொருட்களை வழங்கி வாழ்த்தினார். இதில் தாயகம் கவி எம்எல்ஏ, மண்டலக்குழு தலைவர் சரிதா மகேஷ்குமார், பகுதி செயலாளர் ஐசிஎப் முரளி, நிலைக்குழு உறுப்பினர் சர்ப ஜெயாதாஸ், தலைமை கழக வழக்கறிஞர் சந்துரு, குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்கள் அருணா, உமாமகேஸ்வரி, இந்திரா. வனிதாதேவி, உஷா. லாவண்யா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

சென்னை, ஓட்டேரி, செல்லப்பிள்ளையார் திருக்கோயிலுக்குச் சொந்தமான

# ரூ.1.5 கோடி மதிப்பீட்டிலான சொத்து மீட்பு!

சென்னை, செப்.30

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவுறுத்தலின் படியும் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அதன்படி நேற்று (29.9.2023) சென்னை, ஓட்டேரி, செல்லப்பிள்ளையார் திருக்கோயிலுக்கு சொந்தமான ரூ.1.5 கோடி மதிப்பீட்டிலான சொத்து மீட்கப்பட்டு திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டுள்ளது.

சென்னை, ஓட்டேரி, செல்லப்பிள்ளையார் திருக்கோயிலுக்கு சொந்தமாக ஓட்டேரி செல்லப்பெருமாள் கோயில் தெருவில் அமைந்துள்ள 1,440 சதுரடி பரப்பளவிலான கட்டிடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தது. சென்னை மண்டலம் இணை ஆணையர் நீதிமன்ற உத்தரவின்படி சட்டப்பிரிவு 78 மற்றும் 79-ன் கீழ் ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இணை ஆணையர் திருமதி ஐ.முல்லை தலைமையில், உதவி ஆணையர் (கூடுதல் பொறுப்பு) திருமதி சி. நித்யா முன்னிலையில் காவல்துறை மற்றும் வருவாய்துறை அலுவலர்களின் உதவியோடு ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டது. மீட்கப்பட்ட சொத்தின் தற்போதைய சந்தை மதிப்பு ரூ.1.5 கோடியாகும்.

இந்நிகழ்வின்போது திருக்கோயில் செயல் அலுவலர் சண்முகம், சிறப்பு பணி அலுவலர்கள் மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் உடனிருந்தனர்.

